5, தகவல் கோரல்.

ஓர் உறுப்பினரைப்பற்றி பேரவைத் தலைவர் குறிப்பிட்ட சொற்கள் நடவடிக்கை குறிப்பில் இடம் பெறலாமா என்பது குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப் : சார், நம்முடைய திரு. உமாநாத் அவர்கள் ஒரு விஷயத்தைச் சொல்லும்போது திரு. சுப்பு அவர்களைக் குறிப்பிட்டு, ''தாங்கள் சொன்னால்தான் கேட்பார், நான் சொன்னால் கேட்க மாட்டார்'' என்று நீங்கள் சொன்னீர்கள். சபாநாயகர் சொல்லியும் கேட்கமாட்டார் என்பது சரியா? அது அவைக் குறிப்பில் இடம் பெறலாமா என்பதற்கு தங்களுடைய தீர்ப்பை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதை ஒரு பிரச்சனையாகச் சொல்லவில்லை ; அதை ஒரு பரஸ்பர நல்லெண்ணத்தில் தான் சொன்னேன். அது சபைக் குறிப்பில் இருக்கலாம் ; அதில் ஒன்றும் தவறில்லை.

(4) 1978-79-ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். ஏறத்தாழ 28 பேர்கள் இன்றைக்குப் பேச வேண்டும். கிட்டத்தட்ட 180 நிமிடம் இருக்கிறது. அதனால் ஆளுக்கு 5, 6 நிமிடம்தான் வரும். கடைசியில் அமைச்சர் பேச வேண்டும் : பிரதான எதிர்க்கட்சி இறுதியில் பேசுவதற்கு அதிக நேரம் கேட்பார்கள். ஆகவே, 5 நிமிடத்திற்குள் ஒவ்வொரு உறுப்பினரும் முடித்துக் கொண்டால் நல்லது. அப்படியானால்தான் 28 பேர்களும் பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்கும். முதலில் திரு. தாழை மு. கருணநிதி. நீங்கள் 10 நிமிடம் எடுத்துக் கொள்ளலாம். (திரு. லத்தீப் குறுக்கீடு) திரு. லத்தீப் அவர்களுடைய உணர்வுகளை நான் புரிந்துகொள்கிறேன். ஆனால் நான் என்ன செய்ய முடியும்? 5 நிமிடம் என்று சொன்னால்தான் 6, 7 நிமிடத்திற்குள் முடிப்பார்கள். ஆகவே, 5 நிமிடம் என்று கட்டுப்படுத்திக் கொண்டால் நல்லது. அதிக நேரம் பேச வேண்டுமென்றால் நீங்களாகவே 10 பேர்களை மட்டும் பேசுவதற்கு பெயர் கொடுங்கள் ; ஆளுக்கு 20 நிமிடம் பேசலாம். அதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. இல்லை என்றால் இருக்கின்ற நேரத்திற்குள் அத்தனை பேர்களும் பேசவேண்டும்; அப்படியானால் ஆளுக்கு 5 நிமிடம்தான் வரும்.

திரு. தாழை மு. கருணநிதி : பேரவைத் தலைவரவர்களே இன்றையதினம் மாண்புமிகு அரசின் நலத்துறை அமைச்சரவர்கள் முன் மொழிந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.